**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**

**DINDIGUL.**

**C.C.No.3/2026**

**Prosecution Witness :1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | முருகன் | **Caste** | : | |
| **Father's Name** | : | நல்லுசாமி | **Calling** | : | டிரைவர் |
| **Village** | : | சிங்காரக்கோட்டை | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | 42 |
| | | | **Dated** | : | 11.08.2026 |

**11.08.2026.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–1 திரு. **முருகன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.</u>**

1. நான் திண்டுக்கல் வேடசந்தூர் சிங்காரக்கோட்டையில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன்.சுமார் 3 வருடத்திற்கு முன்னால் மாலை 4.00 மணி போல் நானும் காசிராமும் இருசக்கர வாகனத்தில் திண்டுக்கல் அஞ்சலி ரவுண்டான அருகே சென்றுக்கொண்டிருந்தோம். அப்போது அடையாளம் தெரியாத நான்கு சக்கர வாகனம் எங்களுக்கு பின்னால் வந்து இடித்ததில் நிலை தடுமாறி நானும் காசிராமும் கீழே விழுந்துவிட்டோம். அருகில் இருந்தவர்கள் 108 ஆம்பலன்ஸ் மூலம் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு வந்த போலிசாரிடம் விபத்து குறித்து நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம்

N. முருகன்

11/8

என்னுடையது தான். காசிராமும் சிகிச்சை பலனின்றி மதுரை அரசு ராஜஜி மருத்துவமனையில் இறந்துவிட்டதாக தகவல் கேள்விப்பட்டேன். **புகார் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

புகாரில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. எந்த வாகனம் மோதியது என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான். யார் வாகனத்தை ஓட்டி வந்தார் என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான்.

N. முருகேசன்

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

Judicial Magistrate No.I

Dindigul.